கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.62/2018**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.02.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 12.02.2024 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | அம்சவள்ளி | வயது.. | 55 |
| கணவர் பெயர்.. | சுப்பிரமணியன் | கிராமம்.. | மிராளூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

**1.** எனது தகப்பனாரின் பெயர் குமாரசாமி. வழக்கு சொத்தை குமாரசாமி 29.07.1992- ல் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுததார் என்றால் சரிதான். குமாரசாமி என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தாரா அல்லது ஜீவா, தமிழ்மணி பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தாரா என்றால் ஜீவா, தமிழ்மணி பெயரில் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து என்னை காப்பாளராக நியமனம் செய்துார். ஜீவா, தமிழ்மணி என்னுடைய மகன், மகள். 08.02.2017 அன்று ஜீவா, தமிழ்மணி மாலதி பெயரில் கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். மாலதி கிரயம் பெற்ற பிறகு பட்டா யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் எனது தகப்பனார் குமாரசாமி பெயரில் இருந்தது அதன் பிறகு பட்டா பெயர் மாற்றம் செய்யப்ட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது.

2. முத்துலட்சுமியை எனக்கு தெரியுமா, என்னுடைய உறவுவா என்றால் என்னுடைய உறவுக்காரர் தான். முத்துலட்சுமி அசல் வழக்கு எண்.168/2010 என்ற வழக்கை என் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் தெரியும் ஆனால் அப்போது அதன் பற்றிய விவரம் சரியாக தெரியவில்லை. அசல் வழக்கு.168/2010 எனது தகப்பனார் குமாரசாமி பிரதிவாதியாக நடத்தி வந்தார் என்றால் இல்லை, அவர் இறந்தபின்னிட்டு தான் தீர்ப்பு பெறப்பட்டது. அசல் வழக்கு எண்.168/2010 வழக்கில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். முத்துலட்சுமி வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் வழக்கு செய்த ஒப்புதல் எடுத்துவிட்டார் என்றால் இல்லை, 11 செண்ட் மட்டும் ஒப்புதல் எடுத்துவிட்டார். மீதியுள்ள சொத்தானது எனது தகப்பனார்

குமாரசாமியின் சொத்து. அந்த சொத்தை குமாரசாமி அவருடைய பேரன் பேத்தியான என்னுடைய மகன் மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார்.

3. புல எண்.189/3 22 செண்ட் நிலம் தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கீழ்புரம் 11 செண்ட் முத்துலட்சுமிக்கு பாத்தியம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் மேல்புரம் 11 செண்ட் முத்துலட்சுமிக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். மேல்புரம் 11 செண்ட் நிலத்தை முத்துலட்சுமி நீதிமன்றம் மூலம் ஒப்புதல் எடுத்துவிட்டார் என்றால் அவ்வாறு ஒப்புதல் எடுக்கும்போது அது பற்றிய விவரம் எனக்கு சரியாது தெரியாது, குமாரசாமி என் பிள்ளைகளுக்கு கொடுத்த செட்டில்மெண்ட்ம் அதனை தொடர்ந்து மாலதி பெயரில் ஏற்பட்ட கிரயம் உண்மையான கிரயம் இல்லை என்றால் சரியல்ல. மாலதி என்னை சாட்சியம் அளிக்க அழைத்தன் பேரில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்..வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லை என்றாலும் அதில் எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றாலும சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

sd/-S.Suganiya Sri,
Additional District Munsif,
Chidambaram.